රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/03/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2023.06.02

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆனால் இதுவரை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்படாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்தை செலுத்தல்.</u>**

2012.09.07 ஆந் திகதிய மற்றும் 1774/31 ஆம் இக்கத்துடைய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இலக்கம் 1745/11 மற்றும் 2012 பெப்ரவரி மாதம் 14 ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தின் 14ஆம் பந்தியின் பிரகாரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் அரச கொள்கையின் படி பல்வேறு பதவிப் பெயர்களின் கீழ் 2011.08.01 ஆந் திகதிக்கு முன்னர் அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட MN4-2006(A) என்ற சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்படுவார்கள்.

02. அதற்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ள அநேகமான உத்தியோகத்தர்கள் திணைக்கள ரீதியான பதவிகளுக்கு 2005 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இந்த உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாண ஏற்பாடுகளின் படி 10 வருட சேவைக் காலம் பூர்த்தியாகும் திகதிக்கு (மற்றைய தகைமைகள் இருப்பின்) அதாவது 2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவதற்கான தகுதியைப் பெறுகிறார்கள். ஆனால் இந்த உத்தியோகத்தர்களில் குறிப்பிடத்தக்க அளவினர் இன்னும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்க்கப்படுவதற்குத் தேவையான ஆவணங்களை உரியவகையில் சமர்ப்பிக்காமையினால் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்ய

முடியாதுள்ளதோடு, அவர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரப்படுத்தப்பட்ட தரமுயர்த்தலையும் வழங்க முடியாதுள்ளது.

03. பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் படி, MN4-2016 சம்பள அளவுத்திட்டத்தின் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச சம்பளப் படிமுறையான ரூபா. 37,720/- இனை விஞ்சிய சம்பள ஏற்றத்தை வழங்கும் இயலுமை தொடர்பில் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் EST 5/5/15(4) மற்றும் 2023.03.23 ஆந் திகதிய கடிதத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி அதிகபட்சத்தை விஞ்சிய சம்பள ஏற்றத்தை செலுத்துவதுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மூலம் உள்ளடக்கப்பட்டிருப்பது எவரேனும் ஒரு உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டை மீறிய விடயமொன்றின் காரணமாக ஏற்படும் நிலைமையாகும் எனவும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பத்தை தெரிவித்திருந்தும் உள்ளீர்க்கப்படுவதற்கு அவசியப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்காது தவிர்ந்திருப்பதனால் அவ்வுத்தியோகத்தர்களை உள்ளீர்ப்புச் செய்ய முடியாதுள்ளது. ஆனால் அந்த உத்தியோகத்தர்களுக்கு இந்த விடயம் கட்டுப்பாட்டில் உள்ளதால் இந்த உத்தியோகத்தர்களுக்கு பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் MN 04-2016 சம்பள அளவுத்திட்டத்தில் தரமுயர்வு கிடைக்காத வரிசையின் கீழ் ரூபா. 37,720/- இனை விஞ்சிய சம்பள ஏற்றத்தை வழங்க முடியாதுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

04. அதன்படி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்து, இதுவரை உள்ளீர்க்கப்படாத தற்போது இணை சேவை வகுதியின் கீழ் தரம் III இன் பதவியில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 37,720/- இனைத் விஞ்சிய சம்பள ஏற்றத்தை வழங்க முடியாதுள்ளது என தயவுடன் தங்களுக்கு அறியத்தருகிறேன்.

05. அதனால், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பத்தை தெரிவித்திருந்தும் உரிய வகையில் ஆவணங்களை சமர்ப்பிக்காத காரணத்தால் இதுவரை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளீர்கள் என கடிதம் கிடைக்காத உத்தியோகத்தர்களுக்கு சம்பள ஏற்றத்தை வழங்கும் போது எதிர்வரும் காலங்களில் பிரச்சினைகள் எழும் என்பதனால், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ள உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் அமைந்த எனது இலக்கம் CS/DOS/Policy/03/05/(II) மற்றும் 2021.12.16 , 2022.06.15 மற்றும் 2023.01.05 ஆந் திகதிய கடிதங்களின் பால் தங்களின் கவனத்தை ஈர்ப்பதோடு, தங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பத்தை தெரிவித்திருந்தும் இதுவரை உள்ளீர்க்கப்படுவதற்கான கடிதம் கிடைக்கப்பெறாத உத்தியோகத்தர்கள் உடனடியாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு அவசியப்படும் கடித ஆவணங்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

06. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது அவசியப்படும் கடித ஆவணங்களின் குறைபாடுகள் ஒவ்வொரு வாரத்திலும் திங்கட் கிழமை அன்று இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என எனது இலக்கம் CS/DOS/Policy/පොදු/01 மற்றும் 2021.09.17 ஆந் திகதிய கடிதத்தினால் அறியத்தரப்படும் என்பதோடு, இதுவரை கிட்டத்தட்ட 1350 உத்தியோகத்தர்களின் ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தங்களது அமைச்சில் / திணைக்களத்தில்/ அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான ஆவணங்கள் / குறைபாடுகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருப்பின் அந்த ஆவணங்களை எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் தயவுடன் அறியத்தருகிறேன்.

07. மேலும் , எனது இலக்கம் CS/DOS/Policy/පොදු/01 மற்றும் 2021.10.25 ஆந் திகதிய கடிதத்தினால் சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறியப்படுத்துமாறு வெளியிடப்பட்ட கடிதத்தின் படி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மற்றும் மூன்று வருடங்களுக்கும் மேலாக செயலற்றுக் காணப்படும் கோப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் அறிக்கையொன்று இந்த அமைச்சின் இணையத்தளத்தில் ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுவதுடன் 2023.04.03 ஆந் திகதிக்கு 606 செயலற்ற கடித ஆவணக் கோப்புக்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதால் அங்கு தங்களது அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் கடிதக் கோப்பு செயலற்ற நிலையில் உள்ள கடிதக் கோப்பாக இனங்கண்டு வெளியிடப்பட்டிருப்பின் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் / தகவலுடன் குறித்த உத்தியோகத்தர் முனைப்பான சேவையில் உள்ளார் எனவும் விரைவில் அறியத்தருமாறு தயவுடன் தெரியப்படுத்துகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்